நிலைபேறு சக்தித் துறை ஆதரவுச் செயற்திட்டத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2011 யூன் 20 ஆந் திகதிய 2733 எஸ்ஆர்ஐ (எஸ்எவ்) மற்றும் 2734 - எஸ்ஆர்ஐ (எஸ்எவ்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கைகளின் IV ஆம் உறுப்புரையின் 4.05(ஏ) மற்றும் 4.03(ஏ) ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளைப் பின் தொடர்ந்து எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், மின்சக்தி மற்றும் புதுப்பிக்ககூடிய வலு அமைச்சு நிறைவேற்று முகவராக உள்ளதுடன் செயற்திட்டத்தின் பகுதிகள் 1-6 மற்றும் 9-10 இற்கான அமுலாக்கல் முகவராக இலங்கை மின்சார சபை இருக்கும் அதேநேரம் பகுதிகள் 7 மற்றும் 8 இற்கான அமுலாக்கல் முகவராக நிலைபேறு சக்தி அதிகாரசபை இருக்கும். (i) கிழக்கு, வடமத்திய, தெற்கு மற்றும் ஊவா மாகாணங்களிலுள்ள வலுமப்படுத்தப்பட்ட மின்மாற்றி முறைமை, (ii) கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் விரிபுபடுத்தப்பட்ட கிராமிய மின்னிணைப்பு மற்றும் (iii) உயர்த்தப்பட்ட வினைத்திறனான வலு மற்றும் மேலும் புதுப்பிக்கக் கூடிய வலு அபிவிருத்தி என்பவற்றின் ஊடாக வழங்குகின்ற சேவைகளில் நம்பகமான, போதிய மற்றும் மலிவான மினசக்தி வழங்கல் மேவுகை மற்றும் வினைத்திறன் மற்றும் நம்பகத்தன்மையை முன்னேற்றுதல் என்பனவே செயற்திட்டத்தின் குறிக்கோளாக உள்ளது. செயற்திட்ட நிர்வாகக் கைநூலின் பிரகாரம், செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 18,135 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 162.03 மில்லியனானதுடன் அதில் ரூபா 13,427.64 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 120 மில்லியன் அல்லது 74 சதவீதம் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2011 நவம்பர் 17 இல் தொடங்கியிருந்ததுடன் 2014 ஏப்ரல் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. கடன் 2016 ஒக்தோபர் 30 மூடப்பட வேண்டுமென எதிர்பார்க்க்பபட்டது.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட இலங்கை கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக எற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் தீர்மானிக்கும் அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளிற்கும் முகாமைத்துவம் பொறுப்பாகும்.

### 1.4. கணக்காய்வாரின் பொறுப்பு

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வையினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக்

கூடியதாகவிருந்த பதவியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறள் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்ககான சான்றுகளின் பரிசோதனை, பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புகள், அதன் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் என்பவற்றை அப்பரிசோதனை உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு நோக்கங்களிற்கு அவசியமானதென எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட போதிய தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென்றும் நான் நம்புகின்றேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள், சொத்துக்கள், பொறுப்புக்கள், கணக்கீட்டுப் பதிவேடுகள் என்பவற்றின் அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான, ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலவினம் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் முன்னேற்ற அறிக்கைகள் என்பவற்றுக்கிணங்க திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன்வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கட்டுநிதி நிதியக் கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்பதும்,

(உ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ளப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் நிதியளிப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(எ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டு இருந்தனவா என்பதும்,

(ஏ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஒ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான அளவீடுகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஓ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதியிடல் நிபந்தனைகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ் அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிரவும்,

(அ) செயற்திட்டமானது 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துங்களுக்கிணங்க 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) கட்டுநிதி நிதியக் கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தன என்பதுடன் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான அளவீடுகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஊ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதியிடல் நிபந்தனைகளுடன் இணங்கியிருந்தன என்றும் நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

---

**2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ஒப்பந்தகாரர்கள் ஊடாக ரூபா 68.68 மில்லியன் கிரயத்தில் செயற்திட்டத்தால் கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் வாகனங்கள் ஆதனங்கள், பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் மூலதனமாக்கப்படுவதற்கு பதிலாக நடைபெறும் வேலையின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) செயற்திட்டத்தின் சார்பில் மின்சக்தி புதுப்பிக்க்கூடிய வலு அமைச்சால் 2013 இல் செலுத்தப்பட்ட ரூபா 12.56 மில்லியன் தொகையான சுங்கத்தீர்வைகள் மற்றும் கிராமிய மின்பொறியியல் மற்றும் விநியோக முறைமை முன்னேற்றத்தின் கூறின் கீழ் இறக்குமதிசெய்யப்பட்ட 03 லொறிகள் ஆதனங்கள், பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் மூலதனமாக்கப்படுவதற்கு பதிலாக நடைபெறும் வேலையின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

**2.2.2 இணக்கம் செய்யப்படாத மீதிகள்**

---

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட 2733 மற்றும் 2734 ஆம் இலக்க கடன் உடன்படிக்கைகளின் கீழ் மீளாய்வாண்டின் போது பணவளிப்புச் செய்யப்பட்ட முறையே ரூபா 7,531 மில்லியன் மற்றும் ரூபா 678.92 மில்லியன் தொகையான கடன் பெறுகைகள் நிதி அமைச்சின் வெளிவாரி திணைக்களத்தால் பேணப்பட்ட பதிவேடுகளில் காட்டப்பட்ட ரூபா 7,607 மில்லியன் மற்றும் ரூபா 877.62 மில்லியன் ஆன நேரொத்த பெறுகைகளுடன் உடன்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. வித்தியாசத்தை இணங்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

---

கணக்காய்வில் பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2014 மார்ச் 31 இல் அல்லது அதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென வேண்டப்பட்ட செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் 2015 யூலை 02 இலேயே கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) செயற்திட்டமானது கடன் உடன்படிக்கையின் 1.10 ஆம் பிரிவிற்கு முரணாக ஒப்பந்தகாரரால் செலுத்தப்பட்ட ரூபா 8.93 மில்லியன் தொகையான வருமான வரிகளை மீளளிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருந்தது.

## 3. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2014 திசெம்பர் 31 வரை பயன்படுத்திய நிதிகள் என்பன தொடர்பான முக்கியமான சில புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| தோற்றுவாய் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டின் போதான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்தப்பட்ட நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா. மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா. மில்லியன் |
| ஏடிபி | 120.00 | 13,427.64 | 4,307.00 | 45.00 | 4,141.00 | 69.00 | 8,210.00 |
| இலங்கை அரசாங்கம் | 42.03 | 4,707.36 | 13.00 | - | - | - | - |
| இலங்கை மின்சார சபை | - | - | 429.00 | - | 259.00 | - | 1,386.00 |
| மொத்தம் | 162.03 | 18,135.00 | 4,749.00 | 45.00 | 4,400.00 | 69.00 | 9,596.00 |

### 3.2 பௌதீக முன்னேற்றம்

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், காலியிலுள்ள கட்ட உப நிலைய நிர்மாணம் மற்றும் செயற்திட்டத்தின் புதிய காலி மின்சக்தி பரிமாற்ற அபிவிருத்தியின் கூறின் கீழ் அம்பலாங்கொடை முதல் காலி வரை பரிமாற்ற வரிசையின் நிர்மாணம் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பௌதீக செயலாற்றலில் 75 சதவீத்திற்கு மேல் காட்டப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், வடக்கு கிழக்கு மன்சக்தி பரிமாற்ற அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் கிரிபத்கும்புற கட்ட நிலையத்தின் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் மற்றும் ஊவா மாகாணத்தில் விநியோக முறைமையின் வலுப்படுத்தலின் கீழ் கண்டுமுல்ல மற்றும் ராகலவிலுள்ள நடுத்தர வோல்டேஜ் விநியோக முறைமையின் பொருத்துதல் நடவடிக்கைகள் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மெதுவான முன்னேற்றத்தை காட்டியிருந்தது. மேலும், மீள்செயற்பாட்டு மின்சக்தி முகாமைத்துவ கூறின் கீழ் அனியகந்த, அம்பலாங்கொடை மற்றும் கட்டுநாயக்க கட்ட நிலையங்களில் நட்டங்களை குறைப்பதற்காக 40 எம்வீ பிறேக்கர் சுவீச்ட் கப்பாசிட்டர் வங்கிகளின் பொருத்துதலிற்கான கொள்வனவுகள் மீளாய்வாண்டின் போது பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், கிழக்கு மாகாண விநியோக இயலளவு அபிவிருத்தியின் கூறின் கீழ் வழங்கப்பட்ட 03 மோட்டார் வாகனங்கள் அத்தகைய வாகனங்கள் குறிப்புரைகளுடன் உடன்பட்டிருக்காததால் செயற்திட்டத்தால் பின்னர் நிராகரிக்கப்பட்டிருந்தது.

**3.3 முகாமைத்துவ திறமையின்மை**

-----------------------------------------------

இலங்கை மின்சார சபையால் கையாளப்பட்ட சகல வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களிற்காக பொறுப்புடைய இலங்கை மின்சார சபையின் மேலதிக பொது முகாமையாளர் (செயற்திட்டங்கள்) ஆதிக்கத்தின் கீழ் செயற்திட்டத்தின் பகுதிகள் 7 மற்றும் 8 இன் கீழான நடவடிக்கைகள் வந்திருக்கவில்லை. அத்தகையவாறு, இலங்கை மின்சார சபைக்கு ஒதுக்கப்பட்ட 08 பகுதிகளின் நடவடிக்கைகளின் கீழ் ஒட்டுமொத்த கண்காணிப்பு முறைப்படி மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

-----------------------------------------------------

இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் வாகனங்கள் மீது ஒப்பந்தகாரரிடமிருந்து ரூபா 2.05 மில்லியன் முற்பணத்தின் 10 சதவீதம் மற்றும் ரூபா 8.19 மில்லியன் தொகையான சுங்க தீர்வை என்பவற்றினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் குறிப்புரைகளுடன் பொருந்தியிருக்காமை காரணமாக பின்னர் நிராகரிக்கப்பட்டது.